[1992 மார்ச் 10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஜெ. பாலகங்காதரன்

திரு. ஜெ. பாலகங்காதரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும் போது நடமாடும் ஆய்வுக் கூடங்கள் பல இடங்களிலே இருக்கின்றன என்று குறிப்பிட்டார்கள். குறிப்பாக காமராஜர் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் அதிக அளவு தொழிற்சாலைகள் எங்கள் தொகுதியான சிவகாசி தொகுதியிலேதான் இருக்கின்றன. மேலும் ஆலங்குளத்தில் சிமெண்ட் தொழிற்சாலையும் உள்ளது. அங்கே புகை மண்டலமாகக் கிளம்பி கிட்டத்தட்ட 20 மைல் தூர சுற்றளவிற்கு ஆஸ்துமா நோயையும் மற்றும் கேன்சர் நோயையும் உண்டாக்கிக் கொண்டிருக்கிறது. அவற்றையெல்லாம் கட்டுப்படுத்தும்படி மாசுக் கட்டுப்பாடு வாரியத்திடம் அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்கும்படி அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே ஆய்வுக்கூடம் என்பது அங்கங்கே இருக்கிற கழிவு நீர் சுத்தம் செய்யப்படுகிறதா, இன்னும் எவ்வளவு சுத்தம் செய்யப்பட வேண்டும் என்பதைப் பற்றி ஆய்வு செய்வதற்கு மட்டுமே இருக்கிறது. அந்த ஆய்வுக்கூடங்கள் எந்த இடத்திலேயிருந்தும் கழிவுநீர் போன்ற மற்றவற்றையும் எடுத்துக் கொண்டு வந்து அந்த ஆய்வுக்கூடங்களிலே நம்மாலே ஆய்வு செய்ய முடியும். பல இடங்களிலேயிருந்து கொண்டு வருவதற்கு கஷ்டமாக இருக்கிறது என்பதால்தான் வாரம் ஒரு முறை இந்த நடமாடும் ஆய்வுக் கூடங்கள் அங்கே போய்ப் பார்க்க வேண்டும் என்று வைத்திருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்ட இடங்களில் இது போன்ற பிரச்சினைகள் இருக்குமானால் அந்தத் துறையின் சார்பாக நடவடிக்கை எடுப்பார்கள். தேவைப்பட்ட எந்தப் பொருளையும் ஆய்வுக் கூடத்திலே கொண்டு வந்து அதை ஆய்வு செய்வதற்கு ஒழுங்கான நடவடிக்கை எடுப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்; வினா எண் 224 திரு. என். பன்னீர் செல்வம். மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

224—

வன உயிரியல் பட்டமேற்படிப்பு முடித்த மாணவர்கள்.

*4342 திரு. என். பன்னீர் செல்வம் :

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா;

1992 மார்ச் 16]

(அ) வன உயிரியல் பட்ட மேற்படிப்பு முடித்த சுமார் 200 மாணவர்கள் இதுநாள்வரை எந்தப் பணியிலும் அமர்த்தப் படவில்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், இவர்களுக்கு I. F. S.-க்கு இணையான படிப்பு உயர்வு அளிக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) உதவி வனப்பாதுகாவலர் மற்றும் வன சரகர் நேரடி நியமனத்திற்குரிய கல்வித் தகுதியில் வன உயிரியல் பட்ட மேற் படிப்பு (M.Sc., Wild life Biology) படித்தவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது. இதன் மூலம் வன உயிரியல் பட்ட மேற்படிப்பு (M.Sc., Wild life Biology) படித்தவர்கள் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைக் குழு நடத்தும் தேர்வில் கலந்து கொண்டு வனத்துறையில் உதவி வனப் பாதுகாவலர்/சரகர் ஆக நேரடி நியமனம் பெற வாய்ப்புள்ளது.

(ஆ) இந்த பட்ட மேற்படிப்பு முடித்தவர்களை Indian Forest Service-க்கு இணையான படிப்பு உயர்வு அளித்தல் குறித்து வனத்துறையில் ஏதும் செய்ய இயலாது.

திரு. என். பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது போன்று வனத்துறையினுடைய படிப்பைப் படிக்கக்கூடிய அமைப்புகள் இந்தியாவிலேயே இரண்டு இடங் களிலே தான் இருக்கின்றன. அதிலே ஒன்று, மயிலாடுதுறையில் உள்ள ஏ.வி.சி. கல்லூரியாகும். அந்தக் கல்லூரி 1982 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு, இதுவரையில் 150 மாணவர்கள் படித்து வெளியேறியிருக்கிறார்கள். இப்போது 15 மாணவர் கள் படித்துக் கொண்டிருக்கிறார்கள். இதுவரை யாருக்குமே வேலை கொடுக்கப்படவில்லை. ஆகவே இது போன்றவர்களுக்கு உடனடியாக வேலை கொடுக்கப்படுமா? அல்லது வேலை கொடுத்து இதுவரை எத்தனை பேர் வேலையில் இருக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியன் பாரஸ்ட் சர்வீஸ் அளவிற்கு இணையாக அவர்களுக்கு வேலை வாய்ப்புக் கொடுக்க வாய்ப்பில்லை. இது போன்று பட்டப் படிப்பு முடித்தவர்கள் 313 நபர்கள் இருக்கிறார்கள்.

திரு. என். பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையிலே இருக்கின்ற அண்ணா உயிரிய கல்லூரியிலே 6 மாணவர்கள் தினக்கூலியாக வேலை செய்து

கொண்டிருக்கிறார்கள். அவர்கள் நிரந்தரப் பணியாளர்களாக ஆக்கப்படுவார்களா? அடுத்து எம். ஏ., பி. ஏ., படித்தவர்கள் ஐ.ஏ.எஸ். தேர்வு எழுதுவதற்கு எப்படி அனுமதிக்கப்படுகிறார்களோ அதைப்போலவே உயிரியல் சம்மந்தமாக எம்.எஸ்.ஸி., படித்தவர்கள் ஐ.எஃப்.எஸ் தேர்வு எழுத இந்த அரசு மத்திய அரசுக்கு சிபாரிசு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10—00

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்காலிகப் பணியில் இருக்கின்றவர்கள் நிரந்தரப் பணியாளர்களாக நியமிக்கப்படுவார்களா என்று முதல் கேள்வி எழுப்பி இருக்கிறார்கள். அது போன்ற கேள்விக்கு தனிக் கேள்வி போடுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல் எம்.எஸ்.ஸி. பட்டம் படித்தவர்களுக்கு அங்கே இந்தியன் பாரஸ்ட் சர்வீஸ் (ஐ.எப்.எஸ்.) அளவுக்கு பதவி உயர்வு செய்வதற்கு இங்கே தற்சமயம் செயற் குறிப்பு ஏதும் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சி. ஞானசேகரன்:

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. பன்னீர் செல்வம் கேட்டபொழுது எத்தனை பேர் இருக்கிறார்கள் என்று அவர்கள் கேட்டார்கள். அமைச்சர் அவர்களும் முன்னூற்றுச் சில்லரை பேர் இருக்கிறார்கள் என்று குறிப்பிட்டார்கள். அவர்களுக்கு, வனப் பட்டம் படித்தவர்களுக்கு வேலை அளிக்கப் பட்டு இருக்கிறதா? அப்படி இன்னும் அவர்களுக்கு அளிக்கப்படவில்லை என்றால், எத்தனை ஆண்டுகளுக்குள் அவர்களுக்கு வேலை அளிக்கப்படும் என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்மிபுகு திரு கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேவைக்கு ஏற்ப அவர்களுக்கு வேலை அளிக்கப்படும்.

மாண்புமிகு போவைத் தலைவர்: வினா எண் 225. திரு. வ. சத்தியமூர்த்தி. மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

225—

காடுவளர்ப்புப் பணியினை கண்டறிய பொதுமக்கள் பிரதிநிதி.

*5211 திரு. வ. சத்தியமூர்த்தி : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :